## 6.3 மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு பயணப்படி, தினப்படி மற்றும் அமர்வுப்படி அளித்தல்

ஊரக வளர்ச்சி (சி3) துறை.

அரசாணை (நிலை) எண். 101 நாள் : 27.3.1997

1. அரசாணை (நிலை) எண். 238, ஊரக வளர்ச்சித்துறை நாள் 17.4.89.
2. ஊரக வளர்ச்சித்துறையின் கடித எண் 46122/சி3/89–2 நாள் 19.8.89.
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண். நே.மு.க. 11168/97/பிசிஏ.1. நாள் 18.3.97

**ஆணை**

ஊராட்சி ஒன்றியங்களில் தலைவர்கள், துணைத்தலைவர்கள், உறுப்பினர்கள் பேரூராட்சி மற்றும் ஊராட்சித் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்குப் பயணப்படி மற்றும் தினைசரிப்படி வழங்க பார்வை 1ல் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. 1994–தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் தற்போது நடைமுறையில் உள்ளது. இந்த முறையின்படி மாவட்ட ஊராட்சிகளும் முதன்முறைாயகச் செயல்பட்டு வருகிறது. எனவே ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்கள் மாவட்ட ஊராட்சிகளிலுள்ள தலைவர்கள் / உறுப்பினர்களுக்குப் பயணப்படி மற்றும் தினசரிப்படி வழங்கவும், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள படிகளை புதிய வீதத்தில் தற்போது அரசு அலுவலர்களுக்கு நிலை (GRADE) அடிப்படையில் வழங்கப்படுவது போன்று இவர்களுக்கும் வழங்கலாம் எனத் தெரிவித்து கீழ்கண்ட அட்டவணைப்படி பயணப்படி / தினசரிப்படி / அமர்வுப்படி வழங்குவதற்கு அரசிற்கு பரிந்துரைத்துள்ளார் –

| வ. எண் | பதவி | தகுதி | | | |
|---|---|---|---|---|---|
| | | ரயில் | தினப்படி | பேருந்து | அமர்வுத்தொகை கட்டணம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | மாவட்ட ஊராட்டித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள | முதல் வகுப்பு | ரூ.50/– | பயணம் செய்த பேருந்து கட்டணம் | ரூ. 100/– (ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) |
| 2 | அ) ஊராட்சி ஒன்றியத்தலைவர் | முதல் வகுப்பு | ரூ.30/– | பயணம் செய்த பேருந்து கட்டணம் | ரூ. 75/– (ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) |
| | ஆ) ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் | இரண்டாம் வகுப்பு | ரூ.30/– | பயணம் செய்த பேருந்து கட்டணம் | ரூ. 50/– (ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) |
| 3 | அ) ஊராட்சி தலைவர்கள் | முதல் வகுப்பு | ரூ.20/– | பயணம் செய்த பேருந்து கட்டணம் | ரூ. 50/– (ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) |
| | ஆ) ஊராட்சி உறுப்பினர்கள் | இரண்டாம் வகுப்பு | –– | பயணம் செய்த பேருந்து கட்டணம் | ரூ. 25/– (ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) |

பின் குறிப்பு : – மேற்படி பயணக் கட்டணங்கள் அந்தந்த மாவட்டத்திற்குள்ளே அலுவல் காரணமாக மேற்கோள்ளப்படும் பயணங்களுக்கு மட்டுமே பொருந்தும். ஊராட்சி மன்றத்தவைர்கள் மாவட்டங்களுக்கு வெளியே அலுவல் காரணங்களுக்காகப் பயணம் செய்ய நேரிட்டால் மாவட்ட ஆட்சித்லைவர்களின் முன்அனுமதி பெறவேண்டும்.

3. மேற்காணும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்தரையை அரசு கவனமாக பரிசீலித்து பின்னர் ஊரக வளர்ச்சி இயக்குநரின பரிந்துரையை ஏற்று, பார்வை 1 மற்றும் 2ல் கண்டுள்ள அரசாணைகளை ரத்து செய்து மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் / உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் / உறுப்பினர்கள் மற்றும் கிராம

## 6. ALLOWANCES

ஊராட்சிகளின் தலைவர்/ உறுப்பினர்களுக்கு மேலே பத்தி 2–ல் கண்டுள்ளபடி பயணப்படி /தினசரிப்படி / அமர்வுப்படி வழங்கி ஆணையிடப்படுகிறது.

4. உள்ளாட்சித்தலைவர்களின் பயணப்படியில் வட்டார வளர்ச்சி அலுலவர் கையொப்பம் இடுகின்ற முறை தவிர்க்கவும் ஆணையிடப்படுகிறது.

5. இதற்காக ஆகும் செலவிமானது அந்தந்த மாவட்ட ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சிகளின் அமைப்புகளே ஏற்கவேண்டும். இவ்வாணையானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வருகிறது.

6. எல்லா மாவட்ட ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / ஊராட்சிகளுக்கும் இவ்வாணையில் நகலை அனுப்பி வைக்கும்படி ஊரக வளர்ச்சிஇயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 1437/எப்.எஸ். /பி/97 நாள் 21.3.97 மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்